1972 ஆகஸ்டு 9]

ஒரே நாடாக இருக்கிறது என்று சொல்கின்ற ஒரு கட்சியினுடைய ஆட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள்தான், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று ஒரு தனிச் சட்டம் என்று சொல்லி வருகிறார்கள். இது எது வரையில் உண்மை, எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்பதையெல்லாம் பின்னால் பார்த்து அதன் அடிப்படையில் இந்திய ஒற்றுமையைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

THIRU D. SANTOSHAM : I would like to know whether there has been unemployment among the Engineers, particularly among Civil, Mechanical and Electrical Engineers. If so, would any step be taken to tackle the problem of each category separately?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் அப்படி இருந்தது. முதலில் சிவில் இன்ஜினியர்கள் அதிகமாக இருந்தார்கள். அதற்குப் பின்னால் மெக்கேனிகல் இன்ஜினியர்கள் எண்ணிக்கை அதிகமாகப் பெருகியது. இப்பொழுது மெக்கேனிகல் இன்ஜினியர்கள் 1,138, சிவில் இன்ஜினியர்கள் 212 பேர். மெக்கேனிகல் இன்ஜினியரிங் அதிகமாகப் படித்திருக்கிறார்கள். இப்பொழுது தொழிற்சாலைகள் கூடுதலாகி வருவதால், அவர்களுக்கு நல்ல வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன.

THIRU K. S. ABDUL WAHAB : The Hon. Minister informed us that on 20th August 1971, there were more than 2,000 Engineers unemployed. I want to know the figure one year before, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1970-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது 2,539.

* 13 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of trained teachers of all categories, who have registered their names with the Employment Exchanges as on 20th August 1971; and

(b) among them the number of teachers whose names are still on the Live Register of the Employment Exchanges for more than two years?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயிற்சி பெற்ற எல்லா வகை ஆசிரியர்களிலும் எத்தனை பேர் 20—8—1971 வரையில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்?

(இ) அவர்களில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எத்தனை ஆசிரியர்களுடைய பெயர்கள் நடப்புப் பதிவேட்டில் இன்னும் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 29,783.

(இ) 8,241.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வகுப்பு அறைகளில் 60, 70 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை இருந்து வருகிறது. அதனால் மாணவர்களுக்கும் தக்க கவனம் கிடைப்பதில்லை, ஆசிரியர்களுக்கும் கடினமாக இருக்கிறது. அந்த மாணவர் எண்ணிக்கையைக் குறைத்தால் மேலும் பல ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்த முடியும். அதனால் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாணவர், ஆசிரியர் விகிதாசாரம் பல்வேறு பிரச்னைகளில் ஆராயப்பட வேண்டிய விஷயம். இது கல்வித் துறையால் கவனிக்கப்பட வேண்டியது.

THIRU M. RAJAH IYER : Sir, may I know whether these trained teachers who are on the rolls of the Employment Exchanges are being deputed to the various agencies for employment only in the order in which they have been enrolled, and whether any complaints have been received by the Government that candidates who enrolled themselves much earlier are not sent ?

MR. CHAIRMAN : The Hon. Minister said that this matter purely related to the Hon. the Education Minister.

THIRU M. RAJAH IYER : I refer to the Employment Exchanges. May I know whether there is any policy in the Employment Exchanges that candidates who got themselves enrolled should be deputed in the order in which they have been enrolled and those who enrolled themselves much later do not get any advantage over others waiting for such a long time?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தவேலை தேடித் தரும் அலுவலகங்களின் மீது பரவலாகப் பல குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன. எல்லா மாவட்டங்களிலும் இந்த அலுவலகங்களில் சென்று பதிவு செய்து கொண்டு வருகிறவர்கள் ஏதாவது ஒரு புகாரைச் சொல்லிக் கொண்டு தான் வருகிறார்கள். அவர்களும் தொழிலுக்கு ஏற்றவர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்புவதில் பல சங்கடங்களை ஏற்க நேரிடுகிறது. கல்வித் துறையைப் பொறுத்த வரையில், அரசாங்கம் இந்த ஆண்டு வரையில் உள்ளவர்